பக்கங்கள் 18+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 13 செவ்வாய்க்கிழமை 25.02.2025 | அதிர்வு 209



## ஞானசார தேரருக்கு பிணை

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரைப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# அநுரவின் கன்னி ‘பட்ஜட்’ இனிப்பு என எழுதிய நஞ்சு!

## இப்படி கடுமையாகச் சாடுகின்றார் சுரேஷ்





(எஸ்.நிதர்ஷன்)

புதிய அரசின் கன்னி வரவு - செலவுத் திட்டமானது தமிழ் மக்களின் உணர்வுகளைத் திசைதிருப்பி அவர்களின் அபிலாஷைள் ஒருபோதும் நிறைவேறாமல் தடுப்பதற்கான நஞ்சை மறைப்பதற்காக கவர்ச்சிகரமான திட்டங்களை முன்மொழிந்து உருவாக்கப்பட்டுள்ளது என்றும், இது இலங்கையில் எத்தகைய ஆட்சி வந்தாலும் தமிழத் தேசிய இனத்தின் பிரச்சினைகள் தீர்க்கப்படாது என்பதை நிரூபித்துள்ளதாகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். 05

### கனேமுல்ல சஞ்சீவ படுகொலை:

# செவ்வந்தியின் தாயாரும் சகோதரரும் கைது! இதுவரை பத்து சந்தேகநபர்கள் சிக்கினார்கள்!!



பாதாள உலகக் குழுத் தலைவர் கனேமுல்ல சஞ்சீவவைச் சுட்டுப் படுகொலை செய்வதற்காகச் சட்டத்தரணியாக மாறுவேடமிட்டு நீதிமன்றத்துக்குள் துப்பாக்கியைக் கொண்டு வந்து அதைப் பிரதான சந்தேகநபரிடம் கையளித்தார் எனக் கூறப்படும் பெண்ணின் தாயாரும், சகோதரரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றப் பிரிவினால் நேற்று திங்கட் கிழமை கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது 02





# நெடுந்தீவில் உழவு இயந்திரம் விபத்து! இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு!!

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

நெடுந்தீவில் நேற்று இரவு இடம் பெற்ற உழவு இயந்திர விபத்தில் நெடுந்தீவைச் சேர்ந்த நவரத்தினம் ஐங்கரன் என்ற இளம் குடும்பஸ்தர் பலியாகியுள்ளார்.

நெடுந்தீவு மேற்கில் இருந்து உழவு இயந்திரத்தில் பயணித்தபோது பிரதேச வைத்தியசாலையை அண்டியுள்ள மதவடியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததால் விபத்து இடம்பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர், நெடுந்தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

விபத்து தொடர்பில் நெடுந்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# காலி துறைமுகத்துக்கு அருகில் ஆணின் சடலம்

காலி துறைமுகத்துக்கு அருகில் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று காலி துறைமுகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

5 அடி 6 அங்குலம் உயரமுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காலி துறைமுகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**செவ்வந்தியின்...**

என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நீர்கொழும்பு, கட்டுவெல்லேகம பகுதியைச் சேர்ந்த பிங்புர தேவகே சமிந்து திவங்க வீரசிங்க என்ற 23 வயதுடைய இளைஞரும், அதே பகுதியைச் சேர்ந்த சேசத்புர தேவகே சமந்தி என்ற 48 வயதுடைய பெண்ணும் கொலை தொடர்பான தகவல்களை மறைத்து, கொலைக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கனேமுல்ல சஞ்சீவவின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய தற்போது தேடப்பட்டு வரும் பிங்புர தேவகே இஷாரா செவ்வந்தியின் தாயார் மற்றும் இளைய சகோதரன் என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அத்தோடு, இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் இதுவரை 10 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**ஞானசார தேரருக்கு...**

இன்று உத்தரவிட்டுள்ளது.

இஸ்லாம் மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டமைக்காக ஒன்பது மாத சிறைத்தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டிருந்தது.

தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்து தன்னைப் பிணையில் விடுவிக்கக் கோரி ஞானசார தேரர் தாக்கல் செய்த சீராய்வு மனுவை விசாரித்த நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.



# கடத்திச் செல்லப்பட்ட 18 மாடுகள் சிக்கின!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட 18 மாடுகளைச் சாவகச்சேரி பொலிஸார் உயிருடன் மீட்டுள்ளதுடன் சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்தனர்.

கடத்தலுக்குப் பயன்படுத்திய பாரவூர்தியையும் பொலிஸார் கைப்பற்றினர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து அனுமதியின்றி சட்டவிரோதமாக மாடுகள் கடத்திச் செல்லப்படுகின்றன என்று சாவகச்சேரி பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேகத்துக்கிடமான முறையில் வீதியில் பயணித்த பாரவூர்தியை வழிமறித்த பொலிஸார் சோதனையிட்டனர்.

இதன்போது, பாரவூர்திக்குள் 18 மாடுகள் மிக நெருக்கமாக அடைக்கப்பட்டு இருந்தன. குறித்த பாரவூர்தி மாடுகளைக் கடத்திச் செல்லும் போது காற்று வருவதற்காக மேல் பகுதிகளில் சில பகுதிகள் விலக்கப்பட்டு இருந்ததுடன் , உள்ளே மாடுகளைக் கட்டி வைப்பதற்காக கம்பிகள் பொருத்தப்பட்டும், மாடு கடத்தல்களுக்காக எனப் பிரத்தியேகமாகப் பாரவூர்தி வடிவமைக்கப்பட்டிருந்தது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.









# கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து நான்கு கைதிகள் அதிகாலை தப்பியோட்டம்

பொலனறுவை, கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு கைதிகள் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை தப்பிச் சென்றுள்ளனர் என்று வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பிச் சென்ற கைதிகள் நால்வரும் 29 மற்றும் 34 வயதுடையவர்கள்ஆவர்.

கைதிகள் நால்வரும் போதைப் பொருளுக்கு அதிகம் அடிமை யானவர்கள் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதற்கு முன்னரும் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து கைதிகள் பலர் தப்பிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் வெலிக்கந்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 17 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 49 பேர் இதுவரை கைது!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

இலங்கையில் அண்மைய காலங்களில் இடம்பெற்ற அனைத்து துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுடனும் தொடர்புடைய பெரும்பாலானோர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், அது தொடர்பான விசாரணைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மன துங்க தெரிவித்தார்.

பொலிஸ் ஊடகப் பிரிவில் இன்று நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் இதுவரையில் 17 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 11 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுடன் தொடர்புடையவை. ஏனையவை காணித் தகராறு உள்ளிட்ட தனிப்பட்ட முரண்பாடுகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



இந்தச் சம்பவங்களுடன் நேரடியாகத் தொடர்புடைய மற்றும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுக்காக உதவி புரிந்தமை தொடர்பில் இதுவரை மொத்தமாக 49 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியினுள் ரி – 56 ரக துப்பாக்கிகள் ஐந்தும், 6 பிஸ்டல்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறான குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்காக இயலுமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

அதேநேரம், கனேமுல்ல சஞ்சீவவின் கொலையுடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தி என்ற பெண்ணைக் கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அந்தப் பெண் தொடர்பான நம்பகமான தகவல்களை வழங்குவோருக்கு 10 இலட்சம் ரூபா சன்மானமாக வழங்கப்படும். தகவல் வழங்குபவர்கள் தொடர்பில் இரகசியம் பேணப்படும்.

இந்தச் சந்தேகநபர் நாட்டில் இருந்து தப்பிச் செல்வதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.” – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## அநுரவின் கன்னி...

2025ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் குறித்து அவர் இன்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

“இப்போது ஆட்சியில் அமர்ந்திருக்கின்ற தேசிய மக்கள் சக்தி என்று சொல்லக்கூடிய ஜனதா விமுக்தி பெரமுன என்ற இடதுசாரிக் கட்சியானது தனது முதலாவது வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளது. இது தொடர்பாக நாடாளுமன்றத்திலும் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த வரவு – செலவுத் திட்டம் தொடர்பாக ஆளும் கட்சி தரப்பினர் ஆஹா ஓஹோ என்றும் எதிர்க்கட்சிகள் அதனை கடுமையாக விமர்சித்தும் கருத்துகளைக் கூறி வருகின்றனர். இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் முதன் முறையாக முழுமையாக ஒரு இடதுசாரிக் கட்சி ஆட்சியில் அமர்ந்திருக்கின்றது. ஆகவே, அவர்களது பொருளாதாரக் கொள்கையானது இதுவரை ஆட்சி செய்த ஆட்சியாளர்களின் பொருளாதாரக் கொள்கையைவிட மாறுபட்டதாகவும், உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குவதாகவும், அடித்தட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதாகவும் சமத்துவமான சமுதாயத்தை நோக்கிச் செல்லக்கூடிய ஒரு வரவு – செலவுத்திட்டம் அமைந்திருக்க வேண்டும். அது அவ்வாறு அமைந்திருக்கின்றதா என்றால் இல்லை என்றே கூற முடியும்.

இந்த வரவு – செலவுத் திட்டத்தில் இருந்து புதிய அரசின் பொருளாதாரக் கொள்கையில் எத்தகைய வித்தியாசங்கள் இருக்கின்றன என்று பார்க்கின்றபோது எந்த வித்தியாசத்தையும் காணமுடியவில்லை. அதே பழைய விடயங்கள், பழைய உறுதிமொழிகள், ஐ.எம்.எவ்வைத் திருப்திப்படுத்துதல், கற்பனையில் வரக்கூடிய திட்டங்கள் என்றவாறு இந்த வரவு – செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதே தவிர இதில் பிரத்தியேகமாகவோ அல்லது மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதாகவோ எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த வரவு – செலவுத் திட்டத்தில் வடக்கு மாகாணத்துக்கு மிக அதிகபட்ச நிதியை ஒதுக்கியிருப்பதாக ஒரு மாயத் தோற்றம் உருவாக்கப்பட்டுள்ளது. இப்போது வந்திருக்கின்ற அரசு தமிழ் மக்களின் மேல் அக்கறை கொண்டு 5000 மில்லியன் ரூபாவை வடக்கு மாகாண அபிவிருத்திக்காக ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. 5000 மில்லியன் ரூபா என்பது தமிழில் 500 கோடி ரூபா. வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாகாணங்களுக்கும் இதிலிருந்து சராசரி 100 கோடி ரூபா போகலாம். ஆகவே, இந்த 100 கோடி ரூபாவை வைத்துக் கொண்டுதான் 2025ஆம் ஆண்டுக்கு வடக்கு மாகாண அபிவிருத்தியைக் கவனிக்க வேண்டும்.

அபிவிருத்தி என்பது அடிப்படையில் இரண்டு வகைப்படும். ஒன்று நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவது. இரண்டாவது நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி மக்களின் நலன் சார்ந்து சிந்தித்து அவர்களின் வாழ்வாதார வளங்களைப் பெருக்குவது. இந்த அடிப்படையில்தான் இந்த வரவு -செலவுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதா?

வடக்கு – கிழக்கு மாகாணங்கள் யுத்தத்தால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள். இதில் பல்லாயிரக்கணக்கான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன. இன்னும் பல்லாயிரக்கணக்கில் மாற்றுத் திறனாளிகளும் இருக்கின்றனர். பாதிப்படைந்த கிராமங்களும் பிரதேசங்களும் நிறையவே இருக்கின்றன. இவை பற்றி பிரத்தியேகமாகக் கருத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றதா என்றால் இல்லை. கடந்த அரசுகளைப் போலவே இந்த அரசும் அவைகளைக் கண்டுகொள்ளவில்லை.

இந்த அரசின் வரவு – செலவுத் திட்டத்தினூடாக வடக்கு மாகாணத்தில் காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் போன்ற பகுதிகளில் தொழிற்சாலை பூங்காக்களை அமைக்கப்போவதாகக் கூறுகின்றனர். தொழிற்சாலை பூங்காவுக்கு இடங்களை ஒதுக்குவது மாத்திரமல்ல அங்கு தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும், வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும். இவற்றை உருவாக்குவதற்கான முதலீட்டாளர்களை அடையாளம் காண வேண்டும். முதலீட்டாளர்களைக் கவர்வதற்கான கவர்ச்சிகரமான திட்டங்கள் இருக்க வேண்டும். இவை எதுவும் இந்த வரவு – செலவுத் திட்டத்தில் காணப்படவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த தேர்தலில் தங்களுக்குக் கிடைத்த வாக்குகளை இன்னும் பலப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் தனது நிலையை வலுப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையிலும் வடக்குக்கு மிக அதிக பட்சமான நிதி ஒதுக்கப்படுவதாகக் காட்டப்படுகின்றதே தவிர இதில் எத்தகைய உண்மையும் இல்லை.

இந்த வரவு – செலவுத் திட்டமானது வெறும் கடிதாசியில் எழுதப்பட்டிருக்கின்றதே தவிர உண்மையான அடிப்படையில் உருவாக்கப்பட்டதல்ல. அரசு எதிர்பார்க்கின்ற நிதி வருவாயில் துண்டுவிழும் தொகையான 2200 பில்லியன் ரூபாவை எங்கிருந்து திரட்டுவது என்பதே அரசுக்குப் புரியாமல் இருக்கின்றது. இந்தநிலையில் முக்கியமான விடயங்களுக்குத்தான் அரசு முன்னுரிமை அளிக்குமே தவிர, இவர்கள் உறுதியளித்த அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்படும் என்பதல்ல.

இதேபோன்றுதான் வடக்கு மாகாணத்துக்கு உறுதியளிக்கப்பட்ட அபிவிருத்தி நிதி என்பதும் இப்போது வெறும் கடதாசியில் இருக்கின்றதே தவிர, அது வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்ட செயலகங்களை சென்றடையுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்த வரவு – செலவுத் திட்டத்தில் சில கவர்ச்சிகரமான விடயங்கள் இருக்கின்றன போன்ற ஒரு மாயை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அரச உத்தியோகத்தர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தில் உயர்வு, முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பள அதிகரிப்பு, மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1700 ரூபாவாக உயர்த்த கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை, கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு இந்தியாவின் உதவி... இப்படி சில கவர்ச்சிகரமான சொல்லாடல்களால் மக்களைத் திருப்திப்படுத்தி வருகின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் பிரதேச சபைகளையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான முயற்சியில்தான் இந்த வரவு – செலவுத் திட்டம் அமைந்துள்ளது.

இவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் நிறைவேற்றப்படக்கூடிய வாக்குறுதிகள் கூட நிறைவேற்றப்படவில்லை. குறைந்தபட்சம் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் என்றார்கள். அதுகூட நீக்கப்படாமல் புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் வரும் என்று கூறுகின்றார்கள். அரசியல் கைதிகளை விடுவிப்போம் என்றார்கள். இவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் எந்தவொரு அரசியல் கைதியும் விடுவிக்கப்படவில்லை.

கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற போர் மற்றும் படுகொலைகள் தொடர்பாக பொறுப்புக்கூறல் என்பதை மறுதலித்து இப்போது அவருக்கு வக்காலத்து வாங்கவும் முப்படைகளைப் பாதுகாக்கவுமாக ஜெனிவா சென்றிருக்கின்றார்கள்.

ஆகவே, இந்த அரசினுடைய கபடத்தனங்களையும் மாயத்தோற்றத்தையும் பொய்யான உறுதிமொழிகளையும் தமிழ் மக்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய நேரம் வந்திருக்கின்றது. தமிழ் மக்களாகிய நாம் இந்த நேரத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு செயற்படாவிட்டால், தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் என்பது இருண்டதாக மாறிவிடக்கூடிய அபாயம் இருக்கின்றது.” – என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசின் அந்தர்பல்டி

எதிரணித் தரப்பில் இருந்தபடி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக தாம் எழுப்பிய கூக்குரல் நிலைப்பாட்டில் இருந்து ஒவ்வொரு விடயத்திலும் தலைகீழாகக் குத்துக்கரணம் அடித்துச் செயல்படுவதுதான் இப்போதைய தேசிய மக்கள் சக்தி அரசின் கொள்கைப் போக்காக - பண்பியல்பாக - இருந்து வருகின்றது.

ஒவ்வொரு விடயத்திலும் எதிர்க்கட்சியில் இருந்தபோது தாங்கள் குறிப்பிட்ட விடயங்களுக்கு மாறான அணுகுமுறைகளையும், கொள்கை போக்குகளையும், நிலைப்பாட்டையும்தான் இந்த அரசு இப்போது தொடர்ந்து பின்பற்றி வருகின்றது.

அதற்கு நல்ல உதாரணம் இலங்கையில் கடந்த 46 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் காட்டுமிராண்டித்தனமான - மிருகத்தனமான - மனித நாகரிகத்துக்கு ஒவ்வாத - கொடுங்கோன்மைச் சட்டமான பயங்கரவாத தடுப்புச் சட்டம் தொடர்பில் இந்த அரசும் ஆட்சி பீடமும் எடுத்திருக்கும் குத்துக்கரண நிலைப்பாடாகும்.

1979இல் தற்காலிக ஏற்பாடாக கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடுப்புச் சட்டம் 1982ல் நிரந்தர ஏற்பாடுகள் சட்டமாக மாற்றப்பட்டது.

1979 முதல் இலங்கையில் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்வதற்கும், அரச பயங்கரவாதம் இந்த நாட்டில் கோலோச்சுவதற்கும் அதுவே நிரந்தரக் காரணியானது. இன்று அதிகாரத்தில் இருக்கும் தேசிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பியினரும் இந்தச் சட்டத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டார்கள். இம்சைப் படுத்தப்பட்டார்கள். அரசு பயங்கரவாதத்தினால் நசுக்கப்பட்டார்கள்.

இந்தக் கொடூரச் சட்டத்துக்கு எதிராக சர்வதேச ரீதியில் அழுத்தங்கள் எழுந்தபோது நடைமுறையில் இருக்கும் ‘பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை’ மாற்றீடு செய்து மாற்றான சட்ட மூலத்தைக் கொண்டுவரும் முயற்சிகள் இரண்டு தடவைகள் எடுக்கப்பட்டன.

ஒரு தடவை 2018 ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது ‘பயங்கரவாதத் தடைச் சட்டம்’ என்ற புதிய சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.


பின்னர் 2023 இல் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த போதும் ‘பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம்’ சமர்ப்பிக்கப்பட்டது.

இரண்டு சட்டமூலங்கள் தொடர்பான கலந்துரையாடல் கூட்டங்களில் கூட பங்கு பற்றுவதற்கு அப்போது எதிரணியில் இருந்த தேசிய மக்கள் சக்தி இணங்கவில்லை. நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும், அதற்கு மாற்றாக - பிரதியீடாக - புதிய சட்டம் எதுவும் கொண்டுவரக்கூடாது என்ற ஒற்றைப் பிடிவாத நிலையில் எதிர்க்கட்சியில் இருந்த போது தேசிய மக்கள் சக்தி உறுதியாக இருந்தது. அந்த நிலைப்பாட்டைப் பகிரங்கமாக அறிவித்துத் தனது கொள்கையாக அது வெளிப்படுத்தியும் வந்தது.

ஆனால் இப்போது அதிகாரத்துக்கு வந்ததும் அது அந்தர் பல்டி - குத்துக்கரணம் - அடிக்கும் தனது வழமையான பல்லவியை இது விடயத்திலும் தொடங்கிவிட்டது.

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதற்காக புதிய மாற்றீடுச் சட்டம் கொண்டுவரப்படும் என்று அந்த ஆட்சி பீடம் இப்போதும் வெட்கமின்றி உத்தியோக பூர்வமாக அறிவிக்கின்றது.

அரச பயங்கரவாதத்தை படையினர் தொடர்வதற்கு வழி செய்யும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நடைமுறையில் இருந்து நீக்குவதற்கு படைத் தரப்பினர் ஆட்சேபிக்கின்றமையால் அந்த ஆட்சேபத்துக்கு பயந்து, அடிபணிந்து, தனது நிலைப்பாட்டில் இருந்து குத்துக்கரணம் அடித்துவிட்டது தேசிய மக்கள் சக்தி...!


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# ‘கிளீன் ஸ்ரீ லங்கா’ வேலைத் திட்டத்தில் கற்பிட்டியில் கடற்கரை தூய்மைப்படுத்தல்

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

அழகான கடற்கரை கவர்ச்சிகரமான சுற்றுலா தளம் எனும் கருப்பொருளில் கற்பிட்டி பள்ளிவாசல்துறை களப்பு கடற்கரையைத் தூய்மைப்படுத்தும் வேலைத் திட்டம் கிராம உத்தியோகத்தர் திருமதி றினோஸா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பள்ளிவாசல்துறை தேசிய மக்கள் சக்தி நிர்வாகக் குழுவினர், பிரதேசவாசிகள் என பலரும் கலந்து கொண்டனர்.







# நல்லதண்ணி ஹமில்டன் பகுதி வனப்பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து!

## 30 ஏக்கர் நிலம் எரிந்து நாசம்!!

(க.கிஷாந்தன்)

நல்லதண்ணி ஹமில்டன் பகுதி வனப் பகுதியில் ஏற்பட்ட தீ தற்போது முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் வனப்பகுதியில் ஏற்பட்ட தீயால் கிட்டத்தட்ட 30 ஏக்கர் நிலம் எரிந்து நாசமாகியுள்ளது எனவும் ஹட்டன் வனப்பகுதி காப்பாளர் வி.ஜே.ருக்ஷன் தெரிவித்தார்.

நல்லதண்ணி ஹமில்டன் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ, அந்தப் பகுதியில் நிலவிய மிகவும் வெயில் வானிலை காரணமாக, வனப்பகுதி முழுவதும் வேகமாகப் பரவியது.

லக்ஷபான இராணுவத்தினர், வன பாதுகாப்பு அலுவலக அதிகாரிகள் மற்றும் நல்லதண்ணி பொலிஸ் அதிகாரிகள் பரவி வந்த தீயைக் கட்டுப்படுத்த முயன்ற போதிலும், மலையின் உச்சியில் பரவிய தீயைக் கட்டுப்படுத்துவது கடினமாக இருந்துள்ளது.

இருப்பினும், நோர்வூட் பிரதேச செயலாளர் சமிரா கம்லத்தின் தலையீட்டால், இலங்கை விமானப்படை பெல் 412 ஹெலிகொப்டரின் உதவியுடன் மவுஸ்ஸாகலை நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டு, 11 முறை தண்ணீர் தெளித்த பின்னர் தீ கட்டுப்படுத்தப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மத்திய மலைநாட்டின் மேற்குச் சரிவுகளில் நிலவும் கடுமையான வெயில் வானிலை காரணமாக, வனப் பகுதிகளுக்கு தீ வைக்கும் நபர்கள் குறித்து ஏதேனும் தகவல் இருந்தால், தனது அலுவலகத்துக்கோ அல்லது அருகிலுள்ள பொலிஸ்நிலையத்துக்கோ சென்று தெரிவிக்குமாறு வி.ஜே. ருக்ஷன் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

# சிவராத்திரி தின சொற்பொழிவு

மானிப்பாய் அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தான சிவராத்திரி தின உற்சவ நிகழ்வில் நாளை (26) புதன்கிழமை இரவு 8 மணிக்கு “சிவராத்திரி விரத மகிமை” என்னும் விடயப் பொருளில் செஞ்சொல்வேந்தர் , சைவப்புலவர் செ.த.குமரன் சிறப்புச்சொற்பொழிவாற்றவுள்ளார்.

சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு பராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.



# 25 வருட போராட்டத்தின் பின்னர் கணி உரிம பெயர் விவரம் வெளியீடு!

(கி.வசந்தன்)

வவுனியா, பண்டாரிகுளம் பகுதியில் வசிக்கும் 83 குடும்பங்களுக்கான காணி உரித்துக்கான பத்திரங்கள் கிடைக்கப் பெறாத நிலையில் 25 வருடங்களாக அவற்றை பெறுவதற்கு காணி உரிமையாளர்கள் பல்வேறு தரப்பினர்களுடன் முயற்சிகளை மேற்கொண்டு வந்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று (24) குறித்த காணி உரிமையாளர்களுக்கான பத்திரங்களை வழங்குவதற்கான பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியல் பிரதேச செயலத்துக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக 25 வருடமாக தமது காணிக்கான உரிமையை பெறுவதற்காக போராடியதன் பலனை அடைந் திருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த காணிக்கான உரிமையை பெறுவதற்கு எந்த அரசியல்வாதிகளும் தமக்கு துணையாக இருக்கவில்லை எனவும் கவலை வெளியிட்டனர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
25 - 08 - 1943



மறைவு
25 - 02 - 2025

## அமரர் நவரத்தினம் தனலட்சுமி

யாழ்.வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி கோயிலடியை வதிவிடமாகவும் தற்பொழுது இல.92, சேர்விஸ் வீதி, (சிவன் கோயிலடி) கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட நவரத்தினம் தனலட்சுமி இன்று (25.02.2025) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் – பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா – கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தையா நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சண்முகலிங்கம், புஸ்பவதி, மகாலிங்கம் மற்றும் தனபாலசிங்கம், இராசகோபால் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான விக்னேஸ்வரன் (விக்னா), விக்னராஜன் (சூட்) மற்றும் நந்தினி (பிரான்ஸ்), விஜிதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்சுதன், வத்சலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் எழில்நிலா, அருண்நிலா, ஈழக்குமரன், கவிநயா, தருணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் எழிலனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிநிகழ்வு நாளை (26.02.2025) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடன் பிற்பகல் ஒரு மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு இரணைமடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.92, சேர்விஸ் வீதி,
கனகாம்பிகைக்குளம்,
கிளிநொச்சி.**

**தகவல்:**
**சிவகாந்தன் (மருமகன்)077 3838 848,
ஜீவகாந்தன் (மருமகன்) 077 4955 185**

# சட்ட விரோதமான முறையில் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறும் மீனவரைக் கட்டுப்படுத்த தவறிய தமிழக அரசு!

### மன்னார் மாவட்ட மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் குற்றச்சாட்டு

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

தமிழக அரசு சட்ட விரோதமான முறையில் இலங்கை கடற்பரப்பில் நுழையும் மீனவர்களை கட்டுப்படுத்த தவறியுள்ளது என்று மன்னார் மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று (24) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தொடர்ச்சியாகக் கைது செய்து வருகின்றனர். இலங்கை அரசை நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் நிலையிலே இலங்கை கடல் பரப்பில் அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

குறித்த கைது நடவடிக்கைகள் ஊடாக இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை கட்டுப்படுத்தப்படுகின்றதா? என்ற விடயம் கேள்விக் குறியாகவே இருக்கிறது. நாங்கள் தொடர்ந்தும் இந்திய மீனவர்களுக்குத் தெரிவித்து வருகின்றோர். தொடர்ந்தும் எமது கடல் எல்லையை தாண்டி வராதீர்கள் என்ற விடயத்தை அழுத்தமாக தெரிவித்துள்ளோம். இந்திய அரசுக்கும் தெரியப்படுத்தி உள்ளோம். தமிழக அரசு சட்ட விரோதமான முறையில் இலங்கை கடற்பரப்பில் நுழைகின்ற மீனவர்களை கட்டுப்படுத்த தவறியுள்ளது.

எல்லை தாண்டும் சம்பவத்தை மீனவர்கள் தொழிலுக்குச் செல்லும் மீன்பிடி சிட்டையில் குறிப்பிட்டுள்ளார்கள் இந்திய கடல் எல்லையை தாண்டாதீர்கள் என்று. ஆனால் அவர்கள் விதி முறைகளை மீறி இந்திய கடல் எல்லையை தாண்டி இலங்கை கடல் எல்லையில் வந்து எமது கரையோர பகுதிகளில் மீன் பிடித்துச் செல்கின்றனர்.



அத்துடன் மீறி நுழையும் நிலையில் தொடர்ச்சியாக தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் இலங்கை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்படுகின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை அத்துமீறிநுழைந்த 32 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த 32 மீனவர்களின் நிலையை நாங்கள் நினைக்கும்போது உண்மையில் வேதனையாகவே உள்ளது. சக மீனவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் கைது தொடர்பில் நாங்கள் வேதனை அடைகிறோம்.

எனினும் கடற்படை முன்னெடுக்கும் கைது நடவடிக்கைகளை நாங்கள் எதிர்க்க முடியாது.குறித்த நடவடிக்கை மூலமாகவே எமது கடல் வளத்தை பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. கடற்படையினர் இரவு, பகல் பாராது எமது கடல் வளத்தை பாதுகாக்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களுக்கு மீனவர்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழக அரசு மீனவர்கள் விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டும். எல்லை தாண்டு வதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது எல்லை தாண்டும் இந்திய மீனவர்களுக்கு தமிழக அரசு தண்டனை வழங்க வேண்டும். எதிர்காலத்தில் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதை விடுத்து எல்லை தாண்டும் நடவடிக்கையை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

எதிர் காலத்தில் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்படும் சம்பவங்கள் இல்லாமல் போக வேண்டும். அதற்கான தீர்வு இந்திய மீனவர்கள் இலங்கை எல்லையை தாண்டாமல் இருப்பதே ஒரே தீர்வு. அவர்கள் இந்தத் தொழில் முறையைக் கைவிட்டு, இலங்கை எல்லையை தாண்டுவதையும் அவர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும்.- என்றார்.

இதன்போது மன்னார் பனங்கட்டு கொட்டு மீனவ சங்கத்தின் பொது முகாமையாளர் அன்ரனி சங்கர், மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்கங்களின் பிரதேச சமாச தலைவர் அகஸ்டஸ் றோச் ஆகியோரும் கலந்து கொண்டு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கருத்துக்களை முன்வைத்தனர்.

# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிர்ப்புணர்வுக் கருத்தரங்கு

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

மலையக பிரதேசத்தில் அண்மை காலமாக சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் குடும்ப வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதனால் பிள்ளைகளின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாகவே காணப்படுகின்றன.

அந்தவகையில் அக்கரப்பத்தனை டயகம பிரதேசத்தில் அண்மை காலமாக சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெற்று வருவதோடு சிறுவர்களுக்கான பாதுகாப்பும் உரிய முறையில் கிடைப்பதில்லை.

அதேவேளை குடும்பங்களில் மதுபாவனை அதிகரித்து வருவதால் குடும்ப வன்முறைகளும் தலைதூக்கி உள்ளன.

இதன் காரணமாக சிறுவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அத்துடன் சிறுவர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகி வருகின்றது.





இந்த நிலையில் இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து சிறுவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் வகையிலும் குடும்பங்களில் ஏற்படும் வன்முறைகளைத் தடுக்கும் நோக்கிலும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது.

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் ஆர். ரமேஸ்வரன் மற்றும் டயகம பிரதேசத்தில் இயங்கும் வாழ்வின் வசந்தம் தைரிய தீபங்கள் அமைப்பினர் ஆகியோரின் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

சமூகத்தில் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகம், குடும்ப வன்முறைகள் மற்றும் பாலியல் துன்புறுத்தலுக்கு எதிராக இந்த விழிப்புணர்வு கருத்தரங்கு டயகம இலக்கம் 1 நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்களில் 100 இற்கும் மேற்பட்ட பெற்றோர்கள், பாடசாலைமாணவர்கள்,பொலிஸ்உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





# கல்முனை மாநகர சபையில் வாசிப்பு மாத பரிசளிப்பு விழா!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை நிர்வாகத்தின் கீழ் உள்ள பொது நூலகங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நேற்று திங்கட்கிழமை (24) கல்முனை மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை பொது நூலகத்தின் நூலகர் முஸ்தாக் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி பிரதம அதிதியாகவும் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இதில் கல்முனை வலயக் கல்வி பணிமனை ஆசிரிய ஆலோசகர் எம். லக்குணம், சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்டு வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி உரையாற்றினார்.





இதன்போது 2024- தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை மற்றும் நற்பிட்டிமுனை பொது நூலகங்களால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் நூலகங்களை சிறந்த முறையில் தொடர்ச்சியாக பயன்படுத்தி வருகின்ற சிரேஷ்ட வாசகர்கள் பலருக்கு இதன்போது விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நற்பிட்டிமுனை பொது நூலகத்தால் தொகுக்கப்பட்ட சிறப்பு மலர் ஒன்றும் இதன்போது வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலகர் எஸ்.எம்.ஆர். அமீனுத்தீன் இதனை அறிமுகம் செய்து வைத்தார். மருதமுனை பொது நூலகத்தின் நூலகர் ஏ. சி. ஹரீஷா சமீம் நன்றியுரை நிகழ்த்தினார்.





# சமுர்த்தி சமூக வலுவூட்டல் திட்டம் தொடர்பான தெளிவூட்டும் நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்.)

மாவட்ட மட்டத்தில் கடமையாற்றும் சம்மந்தப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகளுக்கு சமுர்த்தி சமூக வலுவூட்டல் திட்டம் தொடர்பான விசேட தெளிவூட்டும் நிகழ்வு நேற்று (24) திருகோணமலை மாவட்ட அரச அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தங்கி வாழும் மனநிலையில் இருந்து விலகிச் சுதந்திரமான பிரஜைகள் சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்பும் பொருட்டு மக்களை வலுவூட்டுவது அத்தியாவசியமானதாகும். மக்களிடத்தேயிருந்து கட்டியெழுப்பப்படும் பலத்தை அடிப்படையாகக் கொண்டு ஐவகை வலுவூட்டல் வேலைத் திட்டத்தின் ஊடாக நாட்டின் அனைத்து பிரஜைகளையும் தேசிய பொருளாதாரத்தின் பேரபிமானமுள்ள பங்காளர் ஒருவராக உருவாக்குவதே இவ்வேலைத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இதன்போது வளவாளர்களாகத் தமிழ் மொழியில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் திருமதி. ஏ. பாக்கியராஜா மற்றும் சிங்கள மொழியில் சமூக பாதுகாப்பு மற்றும் நலம்புரி பணிப்பாளர் எச்.கே.ரணவீர ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த காலத்தில் செயல்படுத்தப்பட்ட முக்கிய நலத் திட்டங்கள், வாழ்வாதார மேம்பாடு, நிதி உள்ளடக்கம், உள சமூக ரீதியான உயிர்ப்பூட்டல்கள், சமூக பாதுகாப்பு, பயிற்சியும் வழிகாட்டல்களும், பயனாளிகளை தெரிவு செய்தல், இலக்குகள், ஒழுங்குமுறை, தரவு சேகரிக்கும் முறை, பங்குதாரர்கள், கண்காணிப்பு, படிநிலைகள், முன்னேற்ற மேலாய்வு போன்ற பல விடயங்கள் இதன்போது தெளிவூட்டப்பட்டன.

இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர்கள், மாவட்ட பதவி நிலை உத்தியோகத்தர்கள் பிரதேச செயலாளர்கள், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், திணைக்கள தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.





# வெண்பலகைகள் வழங்கி வைப்பு!

(றிஸ்வான் சாலிஹு)

ஜகோனிக் யூத்ஸ் ஸ்ரீலங்கா அமைப்பின் வருடாந்த செயற்றிட்டமான "கல்விக்குக் கரம் கொடுப்போம்" செயற்றிட்டத்தின் ஊடாக அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு அல்- பாயிஸா மகா வித்தியாலய மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் வகையில் ஆறு வெண் பலகைகள் பாடசாலை அதிபர் எம்.கே.அஹமட் சியாட்டிடம் வழங்கப்பட்டன.

அமைப்பின் தவிசாளர் சிமாம் முஸ்தாக் தலைமையில் நேற்று திங்கட்கிழமை (24) பாடசாலை காலை ஆராதனையின் போது இந்த வெண் பலகைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அமைப்பின் பொதுச் செயலாளர் அப்றத் அஹமட், ஆலோசனை சபை உறுப்பினர் றிஸ்வான் சாலிஹு, அமைப்பின் அக்கரைப்பற்று நிறைவேற்று உறுப்பினர்கள், பாடசாலை பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.



# மீரா பாரதியின் சைக்கிள் பயணம் இன்று பொத்துவிலில் நிறைவானது!

(வி.ரி.சகாதேவராஜா)

மீராபாரதியின் பருத்தித்துறை – பொத்துவில் விழிப்பூட்டல் சைக்கிள் பயணம் இன்று நிறைவு பெற்றுள்ளது.

மாற்றத்துக்கான முன்னோடிச் செயற்பாட்டாளர் மீராபாரதியின் விழிப்பூட்டல் சைக்கிள் பயணம் இன்று (25) செவ்வாய்க்கிழமையுடன் நிறைவுக்கு வந்தது.

கடந்த 05 ஆம் திகதி பருத்தித்துறையில் இந்த விழிப்பூட்டல் சைக்கிள் பயணத்தை ஆரம்பித்தார். இன்று 25 ஆம் திகதி பொத்துவிலில் இப்பயணத்தை நிறைவு செய்தார்.

பருத்தித்துறை முதல் பொத்துவில் வரையான விழிப்பூட்டல் சைக்கிள் பயணத்தின் போது சமூக மாற்றத்துக்கான முன்னோடி செயற்பாட்டாளர் மீராபாரதி நேற்று முன்தினம் அக்கரைப்பற்று தம்பட்டையில் அம்பாறை மாவட்ட கலைஞர்களைச் சந்தித்தார்.

அங்கு வந்தடைந்தஅவருக்குகிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் குழுவினரால் மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

மாகாண சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் வி.குணபால உள்ளிட்ட கலாசார உத்தியோகத்தர்கள், கலைஞர்கள் அவரை வரவேற்றுக் கலந்துரையாடினர்.




# போதை தடுப்பு செயலணி கூட்டம் மட்டக்களப்பில்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான போதைப் பொருள் தடுப்பு செயலணிக் கூட்டம் மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மேலதிக அரச அதிபர் திருமதி சுதர் ஷினி ஸ்ரீகாந்தின் மேற்பார்வையில் போதைப் பொருள் முற்தடுப்பு மாவட்ட இணைப்பாளர் ப.தினேஸின் ஏற்பாட்டில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை (24) இடம்பெற்றது.

மாவட்டத்தில் போதைப் பொருள் தடுப்பை மேற்கொள்வதற்கு 14 பிர தேச செயலகப் பிரிவுகளில் கடமையாற் றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு அவர்களால் செயற்படுத் தப்பட்ட விடயங்கள் தொடர்பான தெளி வூட்டல்களை வழங்கினர்.

எதிர்வரும் காலங்களில் மாவட்



டத்தில் போதைப் பொருள் தடுப்பை மேற்கொள்வதற்குத் தேவையான செயற்பாடுகள் மற்றும் திட்டங்களை வகுத்ததுடன் எதிர்நோக்கும் சவால் கள் தொடர்பாகவும் துறை சார் நிபு ணர்களுடன் கலந்துரையாடலும் இதன் போது இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பிரதேச மட்டத் தில் சிறுவர் மற்றும் இளைஞர், யுவதி களுக்கு விழிப்புணர்வு மூலம் முற் தடுப்பை மேற்கொள்வதற்குத் தேவை யான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதேச செயலா ளர்கள், முப்படையினர், மாவட்ட சிறுவர் உள நல வைத்திய அதிகாரி டான் சௌந்தரராஜா, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் சிரேஷ்ட உளநல வைத்தியர் யூ.டி. ஜெயக்குமார், பொலி ஸார், துறைசார் நிபுணர்கள், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் உத்தியோகத்தர்கள், உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த அரச அதிபர்,

மட்டக்களப்பு மாவட்டத்தை போதைப் பொருள் பாவனையற்ற மாவட்டமாக மாற்றுவதற்கு அனைவரும் செயற்பட வேண்டும்.

சிறார்களைப் பாதுகாத்து விழிப்பு ணர்வு வழங்க வேண்டியது எமது கடமையும் பொறுப்புமாகும்.- என்றார்.




# அட்டாளைச்சேனை பிரதேச இலக்கிய விழா!

(எம்.ஏ.றமீஸ்)

கலாசார அலுவலர்கள் திணைக்களம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்து பிரதேச இலக்கிய விழா அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸப்பிர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், துறைசார் முக்கியஸ்தர்கள் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.றஜாயாவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.எஸ்.ஜஃபர், எம்.அஷ்ரஃப் ஆகியோர் துறைசார் அதிதிகளாய் கலந்து கொண்டனர்.

இதன்போது அட்டாளைச்சேனை பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட இலக்கிய போட்டியில் வெற்றி பெற்ற அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை உள்ளிட்ட



பிரதேசங்களைச் சேர்ந்த கலைஞர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது கலாசார பண்பாட்டு கலை நிகழ்சிகள் மேடையேற்றப்பட்டன. அதிதிகளின் உரைகளும் இடம்பெற்றன.




### ஜேர்மனியில் வலதுசாரிகளின் எழுச்சி !

# அகதிகள் விரோத ஏ.எவ்.டி. கட்சி வெற்றி!!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா.

ஜேர்மனியில் நடந்து முடிந்த 2025 தேர்தல் முடிவுகளில் இருந்து வலதுசாரிகளின் ஆதரவு பாரியளவு அதிகரித்ததை காணக்கூடியதாக உள்ளது. போருக்குப் பிந்தைய ஜேர்மன் வரலாற்றில் இது ஒரு திருப்பு முனையாகும்.

இந்த தேர்தலுக்குப் பிறகு, வலதுசாரி ஏ.எவ்.டி. கட்சியும், கூட்டணி ஆட்சி அமைக்க உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாவது உலகப் போருக்குப் பிந்தைய ஜேர்மனியின் எண்பது ஆண்டுகால வரலாற்றில் இதுவே முதல் முறையாக வலதுசாரிகள் மிகப்பெரும் சாதனை வளர்ச்சியை நோக்கி நகர்ந்துள்ளனர்.

கடந்த பல ஆண்டுகளாக ஜேர்மனியில் அரசாங்கத்தையும் எதிர்க்கட்சியையும் உருவாக்கிய கட்சிகள், எப்போதும் மைய–இடது அல்லது மைய–வலதுசாரியாகவே இருந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் ஜேர்மனியின் பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியாகிவிட்டன. ஐரோப்பிய ஒன்றியத்தில் அமெரிக்க ஆதரவு குறைவடையும் நிலையில் தற்போது ஜேர்மன் சேன்சலர் ஆவார் என எதிர்பார்க்கப்பட்ட அரசியல்வாதியே வெற்றி பெற்றுள்ளார்.

இரண்டாம் உலக போருக்கு பின்னர் ஜேர்மனியின் வலதுசாரி அரசியல் எழுச்சியை மீண்டும் இந்த தேர்தலில் காணக் கூடியதாக உள்ளது. அத்துடன், புலம்பெயர்தல் எதிர்ப்பு வலதுசாரிக் கட்சியும் (ஏ.எவ்.டி. )எதிர்பார்த்தது போலவே இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

2025 ஜேர்மன் தேர்தல் முடிவுகள்

நடந்து முடிந்த தேர்தலில் ஜேர்மன் சேன்சலர் ஆவார் என எதிர்பார்க்கப்பட்ட பிரெட்ரிக் மெர்ஸின் சி.டி.யு. – சி.எஸ்.யு. கட்சி, 208 ஆசனங்களைப் பெற்றுள்ளது. அக்கட்சி 28.6 சதவிகித ஆதரவைப் பெற்றுள்ளது.

பல மனித உரிமை அமைப்புகள் உற்று நோக்கிய புலம்பெயர்தல் எதிர்ப்பு கட்சியான ஏ.எவ்.டி. 151 ஆசனங்கள் பெற்றுள்ளது. அக்கட்சி 20.8 சதவிகித ஆதரவைப் பெற்றுள்ளது.

தற்போது ஆட்சியில் இருந்த ஜேர்மன் சேன்ஸரான ஓலாஃப் ஷோல்ஸின் எஸ்.பி.டி. கட்சிக்கு 121 ஆசனங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. அக்கட்சி 16.4 சதவிகித ஆதரவை மட்டுமே பெற்றுள்ளது.

இதேவேளை ஆட்சியில் இடம்பெற்ற பசுமை கட்சிக்கு 85 ஆசனங்களும், த லெவ்ற் கட்சிக்கு 64 ஆசனங்களும், பி.எஸ்.டபிள்யூ. கட்சிக்கு 5 ஆசனங்களும் கிடைத்துள்ளன.

பிரெட்ரிக் மெர்ஸ் ஜேர்மனியின் அடுத்த சேன்ஸலராக பதவியேற்க இருக்கும் நிலையில், எவ்.டி.பி. கட்சி 5 சதவிகித வாக்குகளைக் கூட பெறாததால், அக்கட்சியின் தலைவரான Christian Lindner தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டார் என்றும் கூறப்படுகிறது.

டிரம்ப்பின் வலதுசாரித்துவ விளைவா?

ஜேர்மனியில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் டிரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய வலதுசாரித்துவ விளைவா அல்லது முழு உலகமும் வலதுசாரி பக்கம் திரும்புகிறதா என்று ஐயமுற வேண்டியுள்ளது.

குறிப்பாக இத்தாலி, பிரான்ஸ், நெதர்லாந்து, ஆஸ்திரேலியாவிலும் வலதுசாரி அரசியல் கட்சிகள் ஆட்சியில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

முக்கியமாக இந்த நாடுகளில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் பொருளாதார கவலைகள், கலாச்சார பதற்றம் மற்றும் பாரம்பரிய நிர்வாகத்தின் மீதான நம்பிக்கை இழப்பும் காரணமாகும். இதன் விளைவாகவே தற்போது வலதுசாரி அரசியல் கட்சிகள் வெற்றி பெற்றதாகக் கூறப்படுகிறது.

அத்துடன் 35 ஆண்டுகால உலகமயமாக்கல் – மூலதனம், பொருள்கள், யோசனைகள், தொழில்நுட்பம், கலாச்சாரம் மற்றும் மக்களின் சுதந்திரமான இயக்கம் – உலகம் முழுவதும் பல வெற்றியாளர்களை உருவாக்கியது என்பது உறுதி, ஆனால் அது தோல்வியுற்றவர்களையும் உருவாக்கியதை அவதானிக்கலாம்.

தோல்வியுற்றவர்கள் முக்கியமாக வளர்ந்த நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் ஆவார்கள். இந்த நாடுகளில் உள்ள முக்கிய கட்சிகள் இந்த தொழிலாள மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதில் அக்கறை கொள்ள முடிவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் விளைவாக, மேற்குலக மக்கள் தொகையில் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியினர் நியாயமான முறையில் கோபப்படுவதை எவராலும் தவிர்க்க முடியாது என்பது

தொடர்ச்சி▼



# அகதிகள் விரோத ஏ.எவ்.டி. கட்சி வெற்றி!!

தொடர்ச்சி▲

உண்மையாகும்.

**ஜேர்மனியின் புதிய சேன்சலர்!**

தற்போது பாரிய வெற்றி பெற்ற 69 வயதான மெர்சின் தலைமையின் கீழ் செயற்பட இருக்கும் கூட்டணியில் வலதுசாரிக் கட்சியான ஏ. எவ்.டியும் இடம்பெற உள்ளது.

அக்கட்சி தேர்தலில் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

ஏ.வ்.டி. கட்சியுடன் மெர்ஸ் நீண்ட, சவால்மிக்க பேச்சு வார்த்தையில் ஈடுபடுவார் என்று நம்பப்படுகிறது. இந்த நிலையில், ஐரோப்பாவில் அமெரிக்காவின் ஆதிக் கத்தைக் குறைக்க செயல்பட இருப்பதாகத் மெர்ஸ் அறிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளிலேயே ஜெர்மனிதான் ஆகப் பெரிய பொருளியலைக் கொண்டுள்ளது. தற்போது அந்த நாட்டின் பொருளியல் பலவீனமாக உள்ளது.

ஜேர்மனியின் பொருளியலை மேம்படுத்தும் பொறுப்பு முதல்முறையாகப் ப பதவி வகிக்க இருக்கும் திரு மெர்சுக்கு உள்ளது.

மேலும், குடியேறிகள் தொடர்பாகவும் ஜேர்மானியர்க ளிடையே மாறுபட்ட கருத்து நிலவுகிறது.

குடியேறிகள் தொடர்பாக அந்த நாட்டைச் சேர்ந்த பலரிடமிருந்து அதிருப்திக் குரல்கள் எழுந்துள்ளன. இந்த விவகாரத்துக்குத் தீர்வு காண வேண்டிய அவசியம் மெர்சுக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கும் சீனா மற்றும் ரஷ்யாவின் நிலைப்பாட்டுக்கும் இடையே ஐரோப்பிய நாடுகள் சிக்கித் தவிப்பதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். இந்த நிலையையும் மெர்ஸ் சமாளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

**ஏ.எவ்.டி. கட்சியின் வளர்ச்சி**

ஜேர்மனியில் ஏ.எவ்.டி. கட்சியின் வளர்ச்சி ஒரு தற்செய லானதல்ல. மாறாக பல தசாப்த கால கடும்போக்குக் கொள்கைகளின் விளைபொருளாகும்.

30 ஆண்டுகளுக்கு பின்னர், கிழக்கு ஜேர்மனியில் முதலாளித்துவத்தின் மீட்சி முழுப் பிராந்தியங்களையும் பேரழிவுக்கு உட்படுத்தி, பாரிய வேலையின்மையையும் சமூக அவலங்களையும் தோற்றுவித்துள்ளது.

கிழக்கு ஜேர்மனி பொருளாதாரத்தின் சீரழிவு, அதனால் விளைந்த வறுமை மற்றும் எதிர்காலத்துக்கான வாய்ப்பின்மை ஆகியவை வலதுசாரிகளுக்கு ஒரு விளை நிலத்தை உருவாக்கின.

சமீபத்திய ஆண்டுகளில், அனைத்து அரசியல் கட்சிகளும் ஊடகங்களும் ஏ.எவ்.டியின் அகதிகள்–விரோத கொள்கையை ஏற்பது உட்பட அதை அங்கீகரிப் பதற்கும் உதவியுள்ளன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.





# விசேட தேவை உடையோருக்கு கொடுப்பனவு, உபகரணங்கள்!

(எம். எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவுக்கு உட் பட்ட விசேட தேவை உடையோருக்கான மருத்துவ உபகரணங்கள் மற்றும் பொதுசன மாதாந்தக் கொடுப்பனவு, நோய்க் கொடுப்பனவு என்பன தெரிவு செய்யப்பட்ட 44 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் சமூக சேவைகள் பிரிவால் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் பி.ரி.எம்.இர்பான் அவர்கள் தலைமையில் (24) வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர், சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஏ.ஜி. முஹம்மட் அர்சாத், சமூக சேவைகள் பிரிவின் பிர தம முகாமைத்துவ உத்தியோகத்தர் கே.எம். அன்சார், கிராம உத்தியோகத்தர்கள், மற்றும் ஏனைய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# 2026 இல் அ.தி.மு.க. ஒன்றிணைந்து வெல்லும்: ஜெயலலிதா பிறந்த நாளில் சசிகலா தெரிவிப்பு

"தமிழகத்தில் 2026 இல் ஆட்சிக்கு வருவதற்கு, தி.மு.க பகல் கனவு காண்கிறது. 2026 தேர்தலில் மகத்தான வெற்றியை நாம் பெறுவோம். இதற்கு அ.தி.மு.கவினர் ஒன்றிணைய வேண்டும். வென்று காட்டுவோம்."

- இவ்வாறு உசிலம்பட்டியில் நடந்த ஜெயலலிதா பிறந்தநாள் விழாவில் சசிகலா பேசினார்.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பசும்பொன் தேவர் கல்லூரி அருகே முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 77 ஆவது பிறந்த நாளையொட்டி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது. இதில் கலந்துகொள்வதற்காக சசிகலா நேற்று சென்னையில் இருந்து மதுரை சென்றார். விழாவில் பங்கேற்ற அவர், மேடையில் வைத்திருந்த ஜெயலலிதா படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்த விழாவில் சசிகலா மேலும் உரையாற்றுகையில், "தமிழகத்தில் 2026 இல் ஆட்சிக்கு வருவதற்கு, தி.மு.க. பகல் கனவு காண்கிறது. ஜெயலிதா மீது அன்பு வைத்த மக்கள் அனைவரும் தற்போதும் அவரை அம்மா என்று அழைக்கின்றனர். ஆனால் தி.மு.கவினர் 'அப்பா' வேஷம் போடத் தொடங்கியுள்ளனர். தமிழகத்தில் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது. பெண்கள் வாழவே தகுதியற்ற மாநிலமாக மாறிபோனது. சென்னை தண்டையார் பேட்டையில் வடக்கு மண்டல பொலிஸ் ஆணையர் அலுவலகத்தில் ரவுடிகள் அட்டகாசம் செய்துள்ளனர். துணை ஆணையர் அலுவலகத்திலேயே இப்படி நடக்கிறது என்றால் வெளியில் மக்களுக்கு என்ன நடக்கும் என்பதை, சிந்திக்கவேண்டும்.

தி.மு.கவினரின் வேஷம் கலையும் நேரம் வந்துவிட்டது. ஜெயலிதா மறைவுக்கு பிறகு பல நெருக்கடிகளை அ.தி.மு.க சந்திந்தாலும், இன்னும் 100 ஆண்டு அ.தி.மு.க. தொடர தொண்டர்கள் விரும்புகின்றனர். தன்னலம்



பார்க்காமல் நாம் ஒற்றுமையுடன் செயல்படவேண்டும். ஒற்றுமையாக செயல்பட்டால் வெற்றி பெறலாம். இதுவே தமிழக மக்களுக்கு நாம் செய்யும் நன்மை.

தீயசக்தியை அகற்ற அ.தி.மு.க. ஒன்றிணையவேண்டும் என தொண்டர்கள் உணர்ந்துள்ளனர். அனைவரையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளேன். எனது முயற்சி வெற்றி பெறும். அ.தி.மு.கவும் ஒன்றுபடும். அ.தி.மு.க. ஆட்சி அமையும் என ஜெயலலிதா பிறந்த நாளில் தொண்டர்களுக்கு தெரிவிக்கிறேன்.

தமிழகத்தில் 2026 தேர்தலில் மகத்தான வெற்றியை நாம் பெறுவோம். இதற்கு அ.தி.மு.கவினர் ஒன்றிணைய வேண்டும். வென்று காட்டுவோம். வரும் காலம் நமக்கு பொற்காலமாக அமையும். எம்.ஜி.ஆரால் உருவாக்கிய அ.தி.மு.கவை ஜெயலலிதா வளர்த்தார். அ.தி.மு.கவே எனது உயிர் மூச்சு. மீண்டும் வெற்றி பெற்று செருக்கோடு இருக்க செய்வதே என்னுடைய வாழ்நாள் லட்சியம். இந்த மண்ணின் மகளாக ஒச்சாண்டம்மன் கோயில் சாட்சியாக சொல்கிறேன். எனக்கென்று யாருமில்லை. தமிழக மக்களின் உரிமைக்கு எனது குரல் எப்போதும் ஒலிக்கும். உண்மை என்றும் தோற்காது. நம்பியுடன் இருங்குங்கள் வெற்றி நிச்சயம்." என்றார்.

# நாடு கடத்தப்பட்ட இந்தியர்கள் 12 பேர் டில்லி சென்றடைந்தனர்

அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் அந்நாட்டில் சட்டவிரோதமாக குடியேறிய பிற நாட்டு மக்களை அமெரிக்க அரசு வெளியேற்றி வருகிறது.

அமெரிக்காவின் நாடு கடத்தும் நடவடிக்கைக்கு பனாமா உள்ளிட்ட லத்தீன் அமெரிக்க நாடுகள் ஒத்துழைப்பு அளித்து வரும் வேளையில் சுமார் 50 இந்தியர்கள் அண்மையில்



பனாமாவுக்கு நாடு கடத்தப்பட்டனர்.

இவர்களில் 12 இந்தியர்கள் துருக்கி ஏர்லைன்ஸ் விமானம் மூலம் இஸ்தான்புல் வழியாக நேற்று முன் தினம் டில்லி சென்றடைந்தனர்.

இதற்குமுன் 3 குழுவினரும் விலங்கிடப்பட்டு கைதிகளை போல அழைத்து வரப்பட்டன என புகார் எழுந்த நிலையில், அவ்வாறு இல்லாமல் இந்தியா வந்த சேர்ந்த முதல் குழு இதுவாகும். இவர்களில் 4 பேர் பஞ்சாபில் இருந்தும் தலா 3 பேர் ஹரியானா மற்றும் உ.பி.யில் இருந்து அமெரிக்கா சென்றவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

# வெள்ளியங்கிரி மலையில் ஏற்றப்பட்ட தமிழக வெற்றிக்கழக கொடி அகற்றல்

கோவை வெள்ளியங்கிரி மலையில் ஏற்றப்பட்ட தமிழக வெற்றிக்கழக கொடியை வனத்துறையினர் அகற்றினர்.

கோவை அருகே மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் பூண்டி பகுதியில் வெள்ளியங்கிரி ஆண்டவர் கோயில் உள்ளது. மகா சிவாராத்திரியை முன்னிட்டு, கடந்த பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் 7 ஆவது மலை உச்சியில் சுயம்பு லிங்கமாக உள்ள வெள்ளியங்கிரி ஆண்டவரை பக்தர்கள் மலை ஏறி தரிசித்து வருகின்றனர்.



இந்நிலையில், த.வெ.க. கட்சி தொண்டர் ஒருவர் 7 ஆவது மலையில் கட்சி கொடியை ஏற்றிவிட்டு வந்துள்ளார். இதுதொடர்பான புகைப்படங்கள், காணொளிகள் சமூக வலைதளங்களில் வெளியாகின.

இதுகுறித்து ஆலாந்துறை பொலிஸார் மற்றும் போளுவாம்பட்டி வனத்துறையினர் விசாரித்து வந்தனர். இதனிடையே, கோவை வனக்கோட்ட அலுவலர் ஜெயராஜ் உத்தரவின் பேரில் மலைப் பகுதியில் கண்காணிப்புப் பணியில் உள்ள வேட்டை தடுப்புக் காவலர்கள் உள்ளிட்டோர் கட்சி கொடியை அகற்றினர். மேலும், வெள்ளியங்கிரி மலையில் த.வெ.க. கொடி ஏற்றியது யார் என்பது குறித்து விசாரணை நடந்து வருகின்றனர்.

# இஸ்ரேலுடனான பேச்சுவார்த்தையை இரத்துச் செய்தது ஹமாஸ் அமைப்பு

இஸ்ரேலுடனான போர் நிறுத்த பேச்சுவார்த்தையை ஹமாஸ் தரப்பு இரத்து செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேலியர்களின் உடல்களை அவமதிக்கும் வகையில் காசாவில் அணிவகுப்பு நடத்தி ஒப்படைத்ததாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டியது.

இது போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் என்றும் இஸ்ரேல் தெரிவித்தது. இதையடுத்து, பணய கைதிகளில் மேலும் 6 பேரை ஹமாஸ் விடுதலை செய்தது.

இந்த நடவடிக்கையின்போதும் காசாவில் மேடை அமைக்கப்பட்டு அணிவகுப்பு நடத்தப்பட்டு பணய கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கையின்போது மேலும் 2 பணய கைதிகளை ஹமாஸ் ஆயுதக்குழு மகிழுந்தில் அழைத்து



வந்துள்ளது.

அந்த பணய கைதிகள் தங்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை விடுப்பது போன்ற காணொளியை ஹமாஸ் ஆயுதக்குழு வெளியிட்டது.

இந்த நடவடிக்கைகள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் மீறும் வகையில் உள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

மேலும், 6 பணய கைதிகளுக்கு ஈடாக இஸ்ரேலிய சிறைகளில் உள்ள பலஸ்தீனியர்களில் 620 பேரை விடுதலை செய்ய மேற்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தத்தையும் தற்காலிகமாக நிறுத்தியது. பலஸ்தீனிய கைதிகளை விடுதலை செய்யாத நிலையில் இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி விட்டதாக ஹமாஸ் குற்றஞ் சாட்டியுள்ளது.

இந்நிலையில், பலஸ்தீனிய கைதிகளை விடுதலை செய்யாதவரை இஸ்ரேலுடன் போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் ஈடுபடப்போவதில்லை என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது.

போர் நிறுத்த பேச்சுவார்த்தையை ஹமாஸ் இரத்து செய்துள்ள நிலையில் பாதுகாப்புப் படையினரை தயார் நிலையில் இருக்கும்படி இஸ்ரேல் பிரதமர் உத்தரவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





# ஆபத்தான நிலையில் பாப்பரசர் பிரான்சிஸ்

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு ஒரு வாரத்திற்கும் மேலாகியும், பாப்பரசர் பிரான்சிஸ் ஓய்வில் இருக்கிறார், ஆனால் சுவாசம் மற்றும் சிறுநீரகக் கோளாறுகளால் ஆபத்தான நிலையில் இருக்கிறார் என்று வத்திக்கான் தெரிவித்துள்ளது.

பல்வேறு உடல்நலப் பிரச்னைகளால் பாதிக்கப்பட்டுள்ள அவருக்கு, மூச்சுக்குழாயில் அழற்சி, சிறுநீரகப் பிரச்சனை இருப்பது அண்மையில் கண்டறியப்பட்டது.

இதையடுத்து, ரோம் நகரில் உள்ள ஜெமிலி மருத்துவமனையில் சிகிச்சைக்காக உடனடியாக சேர்க்கப்பட்டார். அவருக்கு, தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் நிலையில், நிமோனியா பாதிப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த சூழலில் பாப்பரசர் உடல் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வத்திக்கான் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறி விப்பில்,

"புனித தந்தை சுய நினைவுடன் இருந்தாலும், அவரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது. மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதை அடுத்து செயற்கை முறையில் ஒக்சிஜன் செலுத்தப்படுகிறது.

இரத்த அணுக்கள் குறைந்து வருவதால், அதற்கான சிகிச்சையும் தரப்படுகிறது. அதிக வலியை அவர் அனுபவித்து வருகிறார்' என கூறப்பட்டுள்ளது.

# பிரான்ஸில் உள்ள ரஷ்ய தூதரகம் மீது குண்டு தாக்குதல்; விசாரணை தீவிரம்

பிரான்ஸின் மார்சே நகரில் அமைந்துள்ள ரஷ்ய தூதரகத்தின் மீது குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதுபற்றி டாஸ் செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில், தூதரக பூந்தோட்ட பகுதியில் இனந்தெரியாத சிலர் 2 குண்டுகளை வீசி சென்றுள்ளனர் என தெரிவித்துள்ளது.

எனினும், இந்த சம்பவத்தில் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இதுபற்றி ரஷ்ய வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் மரியா ஜகரோவா கூறும்போது,

" மார்சே நகரில் அமைந்த ரஷ்ய தூதரகத்தின் மீது நடந்த குண்டுவெடிப்பு சம்பவம் பயங்கரவாத தாக்குதலின் அறிகுறிகளாகும். இதுபற்றி பிரான்ஸ் உடனடியாக, முழு அளவிலான விசாரணை மேற்கொள்ள வேண்டும். ரஷ்ய அமைப்புகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்க வேண்டும்." என்றார்.



கடந்த வாரம் புதன்கிழமை, ரஷ்யாவின் வெளியுறவு நுண்ணறிவு பிரிவு வெளியிட்ட செய்தியில், ஐரோப்பாவில், குறிப்பிடும்படியாக ஜெர்மனி, போல்டிக் மற்றும் ஸ்கேன்டிநேவியன் நாடுகளில் உள்ள ரஷ்ய தூதரகங்கள் மீது பயங்கரவாத தாக்குதல்கள் நடத்துவதற்கான சாத்தியங்கள் பற்றி உக்ரைன் அதிகாரிகள் பரிசீலித்து வருகின்றனர் என எச்சரித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 25/02/2025








# உக்ரைன் மக்களுக்கு ஆதரவாக ரொரன்றோவில் திரண்ட மக்கள்

**ரஷ்யா உக்ரைனை ஊடுருவி 3ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில் கனடாவின் ரொரன்றோவில் நூற்றுக்கணக்கான கனேடியர்கள் திரண்டார்கள்.**

**கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று, நூற்றுக்கணக்கான கனேடியர்கள், கனடாவின் ரொரன்றோவிலுள்ள நாதன் பிலிப்ஸ் சதுக்கத்தில் கூடி உக்ரைனுக்கு தங்கள் ஆதரவை தெரிவித்துக்கொண்டனர்.**

பேரணியில் கலந்துகொண்ட மக்கள், உக்ரைன், ரஷ்யாவுடனான போரின் நான்காவது ஆண்டில் நுழைந்துள்ளது.

இனியும் அமெரிக்காவை நம்பியிருக்க முடியுமா என்பது தெரியவில்லை, அமைதிப் பேச்சுவார்த்தைகளில் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்குவதன் மூலம் ட்ரம்ப் வரலாற்றின் சரியான பக்கத்தில் இருக்க ஒரு வாய்ப்பு உருவாகியுள்ளது என்று கூறியுள்ளார்கள்.

இந்நிலையில், உக்ரைனின் கனிம வளத்தை அமெரிக்காவுக்கு பகிர்ந்தளிக்கும் நிலையை ஏற்படுத்தக்கூடிய ஒரு ஒப்பந்தம் விவாதத்தில் உள்ளது.

இந்த மாத தொடக்கத்தில் அது தொடர்பான ஒரு ஆரம்ப வரைவு ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஜெலென்ஸ்கி மறுத்துவிட்டார். அது உக்ரைனின் நலனுக்கு ஏற்றதல்ல என்று கூறி அவர் அந்த ஒப்பந்தத்துக்கும் அவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.
















# படிப்பு விசா, பணி அனுமதி, தற்காலிக வசிப்பிட ஆவணங்கள் ரத்து: கனடா புதிய விதி அறிமுகம்

படிப்பு விசாக்கள், பணி அனுமதிகள் போன்ற குடியேற்ற ஆவணங்களை ரத்து செய்ய அதிகாரிகளுக்கு கனடா அதிகாரம் அளிக்கிறது. புதிய விதிகள் குடியேற்றம் மற்றும் எல்லை சேவை அதிகாரிகளுக்கு மின்னணு பயண அங்கீகாரங்கள் மற்றும் தற்காலிக வசிப்பிட விசாக்களை ரத்து செய்ய வெளிப்படையான அதிகாரத்தை வழங்குகின்றன.

கனடாவில் தற்போது உள்ள தனிநபர்களின் தற்காலிக வசிப்பிட ஆவணங்களை அதிகாரிகள் ரத்து செய்ய அனுமதிக்கும் புதிய குடியேற்ற விதிகளை கனடா அறிமுகப்படுத்தியுள்ளது. சில சந்தர்ப்பங்களில், குடிவரவு ஆவணங்களை ரத்து செய்வதற்கான குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்பு விதிமுறைகளை கனடா திருத்தியுள்ளது. திருத்தப்பட்ட விதிமுறைகள் ஏற்கனவே ஜனவரி 31, 2025 முதல் அமலில் உள்ளன. மேலும், அவை கனடா அரசிதழ் II-ல் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த மாற்றங்கள் குடியேற்ற மற்றும் எல்லை சேவை அதிகாரிகளுக்கு மின்னணு பயண அங்கீகாரங்கள் (eTAs) மற்றும் தற்காலிக வசிப்பிட விசாக்கள் (TRVs) ஆகியவற்றை ரத்து செய்ய வெளிப்படையான அதிகாரத்தை வழங்குகின்றன. இதில் ஒரு நபரின் நிலை அல்லது சூழ்நிலைகளில் ஏற்படும் மாற்றம் அவர்களை அனுமதிக்க முடியாததாகவோ அல்லது ஆவணத்தை வைத்திருக்க இனி தகுதியற்றதாகவோ ஆக்குகிறது.

கனடாவில் தங்கியிருக்கும் அங்கீகரிக்கப்பட்ட காலம் முடிவதற்குள் யாராவது வெளியேறிவிடுவார்கள் என்று ஒரு அதிகாரி திருப்தி அடையவில்லை என்றால் அல்லது நிர்வாகப் பிழையின் அடிப்படையில் ஆவணம் வழங்கப்பட்டிருந்தால், அவர் அதை ரத்து செய்யலாம்.

மாணவர்கள் விண்ணப்பித்த பிறகு வேலை அல்லது படிப்பு அனுமதி மறுக்கப்பட்டால், அவர்களின் குடியேற்ற ஆவணங்கள் ரத்து செய்யப்படலாம்.

இருப்பினும், வேறு எந்த சட்டபூர்வ அதிகாரத்திற்கும் விசா அல்லது மின்னணு பயண அங்கீகாரம், தற்காலிக வசிப்பிட விசா, பணி அனுமதி மற்றும் படிப்பு அனுமதி உள்ளிட்ட வேறு எந்த ஆவணத்தையும் ரத்து செய்ய அதிகாரம் இல்லை.

கனடாவிற்கு தற்காலிகமாக பார்வையாளர்களாகவோ, தொழிலாளர்களாகவோ அல்லது மாணவர்களாகவோ நுழைய அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டினர் தற்காலிகமாக வசிப்பவர்களாக கருதப்படுகிறார்கள். அனைத்து தற்காலிக குடியிருப்பாளர்களும் குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் விதிமுறைகளின் கீழ் அனுமதி மற்றும் தகுதித் தேவைகளுக்கு இணங்க வேண்டும்.

தற்காலிக குடியிருப்பாளர்கள் அனைவருக்கும் கனடாவில் பயணம் செய்து நுழைய தற்காலிக வசிப்பிட விசா (TRV) அல்லது மின்னணு பயண அங்கீகாரங்கள் (eTA) தேவை, விலக்கு அளிக்கப்படாவிட்டால். தற்காலிக வசிப்பிட விசாக்கள் ஒரு முறை மட்டுமே செல்லுபடியாகும் அல்லது 10 ஆண்டுகள் வரை செல்லுபடியாகும் மற்றும் பல முறை செல்லுபடியாகும். விசா விலக்கு பெற்ற நாடுகளைச் சேர்ந்த பயணிகள் கனடாவுக்கு விமானத்தில் செல்ல மின்னணு பயண அங்கீகாரங்கள் (eTA) தேவை. மின்னணு பயண அங்கீகாரங்கள் (eTA) ஒரு பயணியின் பாஸ்போர்ட்டுடன் மின்னணு முறையில் இணைக்கப்பட்டுள்ளது, அது பல பதிவுகளுக்கு செல்லுபடியாகும், ஐந்து ஆண்டுகள் வரை அல்லது பாஸ்போர்ட் காலாவதியாகும் வரை, எது முதலில் வருகிறதோ அது வரை செல்லுபடியாகும்.

கனடாவில் வேலை செய்ய அல்லது படிக்க விரும்பும் வெளிநாட்டினரும் பணி அனுமதி அல்லது படிப்பு அனுமதி பெற வேண்டும். ஒரு தற்காலிக வசிப்பிட விண்ணப்பதாரர் கனடாவிற்குள் நுழைந்து தங்க அனுமதிக்கப்படுகிறாரா என்பது பற்றிய இறுதித் தீர்மானம், நுழைவுத் துறைமுகத்தில் உள்ள எல்லை சேவை அதிகாரியால் செய்யப்படுகிறது.

தற்காலிக வசிப்பிட விசாக்கள், பணி அனுமதிகள் மற்றும் படிப்பு அனுமதி ஆவணங்கள் ஆண்டுதோறும் சுமார் 7,000 கூடுதலாக ரத்து செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கனடாவிற்குள் நுழைவதற்கு முன்பு அவர்களின் ஆவணம் ரத்து செய்யப்பட்டால், பயணிகளில் ஒரு சிறிய பகுதியினர் விமான நிலையத்திலோ அல்லது நுழைவுத் துறைமுகத்திலோ திருப்பி அனுப்பப்படலாம். ஐ.ஆர்.சி.சி (IRCC), வெளிநாட்டு நாட்டினரின் ஆவணம் ரத்து செய்யப்படும்போது, அவர்களின் ஐ.ஆர்.சி.சி கணக்கு அல்லது மின்னஞ்சல் வழியாக, ரத்து செய்யப்பட்டதற்கான காரணம் உட்பட, அவர்களுக்குத் தெரிவிக்க முடிந்தவரை விரைவாகச் செயல்படுகிறது.

கனடாவிற்கு வெளியேயும் உள்ளேயும் உள்ள வெளிநாட்டினருக்கு ஏற்படும் பாதிப்புகள் பின்வருமாறு:

தங்கள் தற்காலிக வதிவிட ஆவணம் மீண்டும் வழங்கப்படுவதற்காகக் காத்திருத்தல், இதில் வைத்திருப்பவரின் பயண ஆவணம் தொலைந்து போயிருந்தாலோ அல்லது திருடப்பட்டாலோ, அவர்கள் மாற்றீட்டிற்காகக் காத்திருப்பதாலோ வழக்குகளும் அடங்கும்;

எதிர்கால தற்காலிக வசிப்பிட ஆவண மதிப்பீடுகளை பாதிக்கக்கூடிய அவர்களின் ஐ.ஆர்.சி.சி கணக்கில் ரத்துசெய்தல் பதிவேடு இருப்பது;

அனுமதிக்க முடியாத மற்றும் தகுதியற்ற சந்தர்ப்பங்களில், கனடாவை விட்டு வெளியேற வேண்டியிருக்கும்;

விமான நிலையத்தில் ஏற மறுக்கப்படுதல்;

நுழைவுத் துறைமுகத்தில் கனடாவுக்குள் நுழைய மறுத்தல்;

ஒரு வெளிநாட்டவர் தங்கள் பயண டிக்கெட்டை வாங்கி கனடாவுக்கு இனி பயணம் செய்ய அங்கீகரிக்கப்படாத சந்தர்ப்பங்களில் நிதி இழப்பு ஏற்படும்.



# உக்ரைனுக்கு 5 பில்லியன் டொலர் நிதியுதவி வழங்கும் கனடா அரசு

ரஷ்யாவின் முடக்கப்பட்ட சொத்துகளிலிருந்து உக்ரைனுக்கு 5 பில்லியன் டொலர் நிதியுதவி வழங்கவுள்ளதாக கனடா அறிவித்துள்ளது.

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, உக்ரைனில் நடைபெற்ற அமைதி மற்றும் பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்டு, ரஷ்யாவின் முடக்கப்பட்ட சொத்துகளிலிருந்து 5 பில்லியன் டொலர் உதவியாக வழங்கப்படும் என அறிவித்தார்.

உக்ரைனில் போர் தொடங்கி மூன்றாம் ஆண்டை நினைவுகூரும் இந்த மாநாட்டில் ட்ரூடோ, மேலும் 25 லேசான கவச வாகனங்கள், 2 போர்ப் பாதுகாப்பு வாகனங்கள், எப்-16 விமானம் பயிற்சி கருவிகள் மற்றும் ஆற்றல் பாதுகாப்பிற்கான நிதி வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

உக்ரைன் எந்த விதத்திலும் இந்த போருக்கு காரணம் அல்ல என்றும் இது ரஷ்யாவின் பேரரசை விரிவுபடுத்தும் நோக்கத்தினால் உருவானது என்றும் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா உக்ரைனின் பங்கேற்பு இல்லாமல் ரஷ்யாவுடன் அமைதி பேச்சுவார்த்தை நடத்துவது ஆபத்தானது என்றும், உக்ரைனே இதை முடிவு செய்ய வேண்டும் என்றும் ட்ரூடோ வலியுறுத்தினார்.

இது ட்ரூடோவின் நான்காவது உக்ரைன் பயணம், மேலும் அவர் லிபரல் கட்சியின் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் காரணத்தால், இது அவரது கடைசி பயணமாக இருக்கலாம் என்று குறிப்பிடப்படுகிறது.

